## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி. 16/2018

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 4 வது நபரின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பங்கி | வயது | 33 |
| த.பெ.(அ)க.பெ. | ராஜா | தொழில் | |
| ஊர் | அய்யங்கொல்லை | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் அய்யங்கொல்லை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பானிபூரிகடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 மகேந்திரனை தெரியும்.வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரியதன் போில் மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

அ.சா. 1 மகேந்திரனுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். அதன் காரணமாக கடந்த 03.06.2017 ந் தேதி மாலை 5.00 மணிக்கு அ.சா.1 தனது நிலத்தை ஆள் வைத்து டிராக்டர் முலம் ஓட்டிக்கொண்டிருந்த போது எதிரிகள் அதை தடுத்தார்கள் என்றும், அ.சா. 1 சம்பவ இடத்திற்கு வந்து அது குறித்து கேட்ட போது எதிரிகள் அவரை ஆபாசமாக திட்டியும் 1ம் எதிரி தனது கையில் வைத்திருந்த கட்டையால் அ.சா.1 ஐ தாக்கியும் மற்ற எதிரிகள் எனது கணவர் ராஜாவை அதே கட்டையால் தாக்கியும் காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் ராஜா 2 ஆண்டுகளுக்கு முன்பு சாலை விபத்தில் இறந்துவிட்டார். தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் என்னிடம் சமாதானம் பேசி எதுவும் நடக்கவில்லை என்று சொன்னதால் தான் நான் அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரிதான். நான் போலீஸ் விசாரணையில்

சம்பவத்தை நேரில் பார்த்தாக கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

ஆஜர் எதிரிகளும், நானும் பேசி சமாதானம் ஆகவில்லை என்றால் சரிதான். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை.